★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 22உ சனி (4—2—56) ★ ★ வெளியூர்: தை 23உ ஞாயிறு (5—2—56) [இதழ் 200

ரஷ்ய மொழியில் திருக்குறள்!

சென்னை பிப். 3—

திருக்குறள் ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வருவதாகவும், விரைவிலேயே ரஷ்ய மக்களுக்கு குறள் கிடைத்துவிடுமெனவும் சென்னை வந்துள்ள பிரபல ரஷ்ய எழுத்தாளரும், உலக சமாதானக் 'கவுன்சில்' உறுப்பினருமான எலியா எரன்பர்க் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

சென்னை அமைச்சர்களின் ஏமாளித்தனம்

உளறுவாயால் உரிமையை கோட்டைவிட்ட கோமாளித்தனம்

'பனம்பள்ளி எள்ளிநகையாட ஏன் இடமளித்தீர்?'

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் கண்டனம்

சென்னை, பிப். 4—

"மாநிலப் புது அமைப்புக் குழுவினர் அறிக்கை குறித்து சென்னை சட்டசபையில் விவாதம் நடந்தபோது, கீழ் சட்ட சபையில் மந்திரி சுப்பிரமணியம், சென்னை மாநில அமைப்புப் பற்றிய தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசுகையில், 'தேவிகுளம்-பீர்மேடு தாலுகாக்கள் தமிழகத்துடன் இணைய வேண்டும்' என்று பேசினர்; ஆனல், அதே பொருள் குறித்த தம் மேல்சபையில் நடைபெறும்போது மந்திரி பக்தவத்சலம், 'தேவிகுளம், பீர்மேடு வட்டங்கள் மட்டுமின்றி நெய்யாற்றங்கரை, கொச்சின் - சித்தூர் வட்டங்களின் தமிழ்ப் பகுதிகளும் சென்னையுடன் இணையவேண்டும்' என்று பேசியிருக்கிருர்.

"கீழ் சபையில் மந்திரி சுப்பிரமணியம் பேசியதற்கும், மேல் சபையில் மந்திரி பக்தவத்சலம் பேசியதற்கும் உள்ள வேறுபாட்டினைச் சுட்டிக்காட்டி, திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன், சென்னை மந்திரிகளின் ஏமாளித் தனத்தை எள்ளிநகையாடியிருக்கிருர்.

"'தேவிகுளம், பீர்மேடு வட்டங்கள் உண்மையில் தமிழ் மக்களுக்குச் சொந்தமானவை என்ருல், சென்னை மந்திரிகளின் பேச்சுக்களில் இந்த முரண்பாடு இருப்பானேன்? இவர்களுக்கே 'எது தமிழருக்குச் சேரவேண்டியது; எவை தமிழ் மக்களுக்காகக் கோரப்படவேண்டிய வட்டங்கள்' என்பது தெரியவில்லை; தெளிவில்லாத இவர்கள், வெறும் வல்லடி வழக்கிறகாகத்தான் தேவிகுளம், பீர்மேடு வேண்டுமெனக் கேட்கிருர்கள்; வம்பு செய்கிருர்கள்'—என்று பனம்பள்ளி வாதிட்டிருக்கிருர்.

"சென்னை மந்திரிகளின் அக்கரை—கவலையின்மையின் விளைவை, பொறுப்பில்லாத் தன்மையைப் பனம்பள்ளி கோவிந்த மேனன், தேவிகுளம், பீர்மேடு தனக்கு வேண்டுமெனக் கோருவதற்கு ஒரு வாதமாக ஆக்கிக்கொண்டிருக்கிருர்; இந்தச் சென்னை மந்திரிகள் ஆடு திருடிய கள்ளன் போலத் திருதிருவென விழித்து நின்றிருக்கின்றனர்.

"தங்கள் கோமாளித்தனத்தால்—ஏமாளித்தனத்தால், தமிழர் தம் உரிமையைக் கோட்டை விட்டுவிட்டு வந்து, இங்கே, 'எவருக்கானுல் என்ன?' என்று பேசுகின்றனர்; இந்த ஏமாளிகளின் பிடியில் நாடு இருந்தால், எப்படி மக்கள் அமைதியான வாழ்வு பெற்றுத் திகழ முடியும்?

"பனம்பள்ளி கோவிந்த மேனன் கூறியிருக்கிருர்—'சென்னை மந்திரிகளின் ஒப்புதலின்பேரில்தான் செங்கோட்டையில் பாதி கேரளத்திற்குக் கிடைத்தது'—என்று; இதுவரை இந்த மாநில மந்திரிகள் அதுபற்றி எதுவும் வாய்திறக்கவில்லை; வக்கு வழி இருந்தால், 'இல்லை' என்று வாய்திறந்து கூறட்டுமே—'நாங்கள் சம்மதிக்கவில்லை'—என்று!

"கூறுவார்களா? கேரளத்திற்கு இவர்கள் தருவதாகக் கூறி வந்திருக்கிற செங்கோட்டைப் பகுதி மட்டும் சுமார் ரூ. 100 கோடி பெறுமான காட்டு வளமுடையது; அதைத் தமிழர்களிடமிருந்து பறித்துக் கேரளத்திற்குத் தர இந்தச் சென்னை மந்திரிகள் சம்மதித்திருக்கிருர்கள். இவர்களிடத்தில் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவிப்பது எவ்வளவு ஆபத்தானது!"

என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை 47-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

விமானப்படையினர் வேலைநிறுத்தம்

விமாகுல், (தென் சைப்ரஸ்) பிப். 3—

சைப்ரசில் பிரிட்டிஷ் இராணுவ, விமானப் படைத்தளங்களில் வேலை செய்யும் ஆயிரக்கணக்கான கிரேக்கர்கள் இன்று வேலை நிறுத்தம் செய்தனர். கிரீசுடன் சைப்ரஸ் இணையவேண்டுமென்ற போராட்டம் நடத்தும் போராட்டத் தலைவர் ஆர்ச் பிஷப் மாகரியால், பிரிட்டிஷ் நிபந்தனையை ஏற்றுக்கொண்டதை மறுத்தே கிரேக்க விமானப் படையினர் வேலை நிறுத்தம் செய்தனர்.

கிருஷ்ண மேனன் மந்திரியாகிருர்

இரு துணை அமைச்சர்களுக்கும் பதவி உயர்வு

புதுடில்லி, பிப். 3—

இந்திய சர்க்காரில் ஒரு அமைச்சராக வி. கே. கிருஷ்ண மேனன் நியமிக்கப்பட்டுள்ளதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செய்திப் போக்குவரத்து துணை அமைச்சர் ராஜ் பகதூரும், உள்நாட்டுத் துணை அமைச்சர் பி.என். தத்தாரும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

மேயர் 'இராஜிஞமா'

ஏற்றுக்கொள்ள மறுப்பு

பம்பாய் நகரை மத்திய ஆட்சியினரின் நிர்வாக மாநிலமாக்க இந்திய அரசியலார் செய்துள்ள முடிவை மறுத்து, பம்பாய் மேயர் புபாலா, இராஜிஞமா சமர்ப்பித்துள்ளார். பம்பாய் மாநில காங்கிரஸ் தலைவரான எஸ். கே. பட்டீல், அவரது இராஜிஞமாக் கடிதத்தை ஏற்க மறுத்து, அவருக்கே திருப்பி அனுப்பிவிட்டாராம்!

★

நிகழ்ச்சி:

சென்னை 47-வது வட்டம் தென் தியாகராய நகர் தி. மு. கழகச் சார்பில், பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள மைதானத்தில் நேற்று ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் திரண்டிருந்தனர்.

கூட்டத்திற்குத் தோழர் செங்குட்டுவன் தலைமை வகித்தார்.

தோழர்கள் முகவை ஆர் எஸ். பாண்டியன், தேவிகுளம்-பீர்மேடு பிரச்சினை குறித்தும், மொழிவழி மாநில அமைப்பின் அவசியம் குறித்தும் சிறிதுநேரம் பேசியதும், தோழர் இளம்பரிதி பேசினர்.

இறுதியாகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தேவிகுளம்-பீர்மேடு பிரச்சினை குறித்தும், சர்வ கட்சி கூட்டணி குறித்தும், பிப்ரவரி 20-ந் தேதி பொது வேலை நிறுத்தம் குறித்தும் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

பம்பாய் மாநிலத்தில் மகாராஷ்டிரப் பகுதியில் உள்ளாட்சிக் கழகங்களிலிருந்து பெருவாரியான உறுப்பினர்கள் இராஜிஞமாச் செய்துள்ளதால், அவைகளின் நிர்வாகத்தை நடத்த ஆலோசனைக் 'கவுன்சில்'கள் அமைக்கும் திட்டம் ஒன்றை மாநில சர்க்கார் பரிசீலனை செய்துவருகிறதாம்.

'பம்பாய் எவருக்கானுல் என்ன என்று பேசும் மராட்டியர் ஒருவர் உண்டா?'

''தேவிகுளம்-பீர்மேடு எங்கிருந்தால் என்ன' என்று மதிப்புள்ள மந்திரிகள் பேசுகிருர்களே!'

ஆட்சியாளர் பரதேசிப் பேச்சுக்கு அண்ணு கண்டனம்

புதர் நிரம்பிய மலை பொன்விளையும் பூமியான வரலாறு

'தேவிகுளம், பீர்மேடு எங்கிருந்தால் என்ன—எவரிடமிருந்தால் என்ன' என்று பேசும் சென்னை மந்திரிகளுக்குச் சூடு-சொரணை ஏற்பட மானத்தோடு போரிடும் மராட்டியர்களைச் சுட்டிக்காட்டினுர் அண்ணு!

மராட்டியத்தில், 'பம்பாய் எவரிடமிருந்தால் என்ன' என்று பேசும் தசைப்பிண்டம் ஒன்றைக் காட்டுவரா மதிப்புள்ள சென்னை மந்திரிகள்—என்று கணை தொடுத்தார் அண்ணு!

தேவிகுளம், பீர்மேடு எவரால் எப்படி வளப்படுத்தப் பட்டது—என்ற சோக வரலாற்றை அண்ணு அவர்கள் சென்னை—வண்ணையம்பதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விளக்கிக் கூறினர். அவரது கருத்துரையின் தொடர்ச்சி இன்றும் தரப்படுகிறது:—

"'மூடுங்கள், மூடுங்கள்'—என்று ஒரு பெருங்கூட்டம் கடை ஒன்றின் வாயிலிலிருந்து கூவவும், 'முடியாது, முடியாது'—என்று கடைக்காரன் ஈனக் குரலில் முனங்கவும், இந்தச் சந்தடிக்கிடையில் கூட்டத்தில் நுழைந்த ஒருவன் கடையிலிருக்கும் கல்லாப் பெட்டியை நோக்கவும், கடைக்காரர் கல்லாப் பெட்டியைக் காப்பாற்றுவதில் கவனம் செலுத்தவும், பின்னர் அதைத் தெரிந்தே விரும்பத் தகாத நிகழ்ச்சி அல்ல—நாம், வரும் பிப்ரவரி 20-ல் காண விரும்புவது!

"பிப்ரவரி 20-ல் நாடெங்கும் ஒரே அமைதி நிலவ வேண்டும்; 'எங்கும் சிறுதளி கலவரமும் இல்லை; அந்தவித பலாத்காரச் செயல்களும் இல்லை' என்ற நிலையைத்தான் நாம் விரும்புகிருேம்.

"எப்படிப்பட்ட அமைதி அந்த நாட்டில் நிலவவேண்டும் தெரியுமா?

"அண்மையில் ஒரு ஆங்கிலப் படம் வெளிவந்தது—பார்த்தவர்களுக்குப் புரியும்—ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் மன்னன், கொடுங்கோலனுக இருக்கிருன்; அவனது கொடுங்கோன்மைக்கு இலக்காகி அந்த நாட்டு மக்கள் தவிக்கிருர்கள்; அவதியுறுகிருர்கள்; இதனைக் கண்ட லேடி கொடைவா என்ற ஒரு பெண்மணி, மன்னனிடம் சென்று, 'என் இப்படி மக்களைக் கொடுமைப்படுத்துகிருய், மன்னவா? என்ன தவறிழைத்தார்கள் மக்கள்?' என்று கேட்டு, 'மன்னன் கொடுங்கோன்மையைக் கைவிட வேண்டும்' எனக் கோருகிருர்.

"மன்னன் கூறுகிருன்—'நீ நிர்வாணமாகக் குதிரை மீதேறி நகரை வலம் வந்தால், நான் கொடுங்கோன்மையைக் கைவிட்டு விடுகிறேன்'—என்று; லேடி கொடைவாவும், இதற்குச் சம்மதிக்கிருர்.

"முதல் நாளன்று, படம் காட்டப்பட்ட கொட்டகையில் கூட்டம் நிரம்பி வழிந்தது—நிர்வாணக் காட்சியைக் காணலாம் என்பதற்காக!

'மறுநாள், கொட்டகை காலியாக இருந்தது; ஏனெனில், அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் கண்ணீர் விட்டு அழுதார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 4—2—'56 சனி

சுதந்திரத் தமிழகம்!

★

சுதந்திரத் தமிழகம்—இந்தியத் துணைக் கண்டத்தில் அல்ல; இலங்கைத் தீவில்!

'சுதந்திரத் தமிழகம் அமைப்போம்' என்று கூட்டுக் குரல் கொடுத்திருக்கின்றனர் அங்குள்ள தமிழர் தலைவர்கள்!

கொடுமைக் குணாளராக விளங்கும் கொத்தலாவலை—அவர் தலைவராகவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினர்—சிங்கள மொழி வெறியர்—ஆகியோரெல்லாம், பெரும்பான்மையினராகச் சிங்களவர்கள்தான் உள்ளனர் என்ற எண்ணத்தில், சிறுபான்மையினராக உள்ள தமிழர்களை 'அடிமை' கொள்ள நினைத்துவிட்டதின் எதிரொலிதான் சுதந்திரத் தமிழகம்!

தாங்கள் ஆளப்படுபவர்களாக—அடிமைகளாக வாழும்போது, அடிமைத்தனத்தின் கேவலமான தன்மைகளை—கொடூரமான விளைவுகளை—கசப்பான அனுபவங்களை எல்லாம், அடிமை நீங்கி, சுதந்திரம் பெற்றதும் மறந்துவிட்டு, பிறரை அடிமைகொள்ள நினைக்கும் போக்கு பொதுவாகக் கீழ்த்திசை நாடுகளிலும், ஆசியாவின் சில பகுதிகளிலும் ஆட்சிப் பொறுப்பிலிருப்போரிடை மலிந்து காணப்படுகிறதுஎன்று கூறப்படுவதில் அதிகமான தவறில்லை என்பதற்கு, இலங்கை சிங்களவர் தலைவர்கள் சான்றாக விளங்குகின்றனர் என்றால் மிகையாகாது.

சிங்களமும், தமிழும் இலங்கை மக்கள் வழங்கும் இரு மொழிகள்; நீண்ட நெடுங்காலமாக இந்த இருமொழி மக்களும் இலங்கைத் தீவில் நல்லுறவுடன் வாழ்ந்திருந்தனர் என்று கூறப்பட்டாலும், இன்று சிங்களவரிடை மிகுந்து காணப்படும் மொழிவெறி — ஆதிக்கவெறி திடீரென முளைத்தது எனக் கொள்வதற்கில்லை.

'தமிழ் மொழிக்கு சிங்களத்தைப் போலவே சம தகுதி தர வேண்டும்' என்று தமிழர்கள் கோருவது நியாய விரோதமானது என்று இலங்கையைப் பற்றி அறிந்த எவரும் கூறுவதாகாது. சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழியாக—அரசாங்க மொழியாக இருக்கவேண்டுமென்பதற்கு இதுவரையில் கொத்தலாவலையோ, அல்லது அவர் தெரிந்தோ தெரியாமலோ வளர்த்துவரும் சிங்கள மொழி வெறியர்களோ, நீதியின் மேல் பசி தாகமுடையவர்கள் ஒப்பக்கூடிய நியாயமான காரணங்களைக் காட்டவில்லை.

மிகத் தெளிவான அநியாயம் புரியத் தொடங்கிவிட்ட ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தமிழ் உறுப்பினர்கள் வெளியேறிவிட்டிருப்பது ஆச்சரியத்திற்குரியதல்ல!

'ஆட்சி மொழி சிங்களம் மட்டும்தான்' என்று துணிந்து சிங்களவர் கூறுவது, தமிழர்கள்மீது நிரந்தரமான ஆதிக்கம் செலுத்துவதற்கு அவர்கள் தீட்டி வைத்துள்ள திட்டத்தின் முதற்படி என்று தமிழர்கள் சந்தேகிப்பது—அஞ்சுவது தவறல்ல!

பெரும்பான்மையினராக உள்ள சிங்களவர், 'சுதந்திரம் தங்களுக்கு மட்டுமே அனுபவிக்கக் கிடைக்க வேண்டும்; தங்கள் வாழ்வு மட்டுமே செழிப்புற்று, நலன் மிகுந்து செம்மையுற விளங்க வேண்டும்; தங்கள் மொழி மட்டுமே அரியாசனம் ஏறும் தகுதி பெற்றதாயிருக்க வேண்டும்' என்று எண்ணத் தொடங்கிவிட்ட நிலையில், 'எங்கள் வாழ்வு சிறக்க—மொழி ஒளி குன்றாது வளர—நாங்கள் தனித்து வாழுவதைத் தவிர வேறு வழியில்லை' என்று தமிழர் தலைவர்கள் முழக்கமிடுகின்றனர்!

சின்னஞ்சிறு தீவு; வாழுவோர், இலட்சக்கணக்கான மக்கள்தான்; பேசுவதோ, இரண்டே மொழிகள்; ஆனால், அவர்கள் ஒன்றாக வாழ முடியாத நிலை இலங்கையில் நிலவுகிறது. ஒற்றுமை பற்றிப் பெரிதாக உபதேசம் புரியக் கிளம்புவோர் கூர்ந்து கவனிக்க வேண்டியதாகும்.

'தன்னைப் போல பிறரையும் நினைக்கும்' பண்பு இருசாராரிடத்திலும் சந்தேகத்திற்கிடமின்றி நிலவும்போதுதான், அந்த இருசாராரும் ஒன்றிவாழ முடியும். 'எங்கள் மொழி, எங்கள் பண்பு, எங்கள் வாழ்வு,' என்ற நோக்கு ஒரு சாராரிடம் தலைதூக்கி, அதன் விளைவாக அவர்கள் மற்றவரை அடிமை கொள்ள எண்ணுவார்களேயானால், எப்படி இருவரும் ஒன்றிவாழ முடியும்? 'தமிழர்கள் பக்கம் நியாயமிருக்கிறது' என்பதை உலக நடுநிலையாளர்கள் ஒப்பவே செய்வர்.

'அவர்கள் எழுப்புகிற சுதந்திர கீதம் குறுகிய நோக்குடையது—வெறுப்பை அடிப்படையாகக் கொண்டது,' என்று எவரும் குற்றஞ் சாட்டத் துணிந்துவிட முடியாது.

கட்சி வேற்றுமைகளை மறந்து, 'தமிழர்கள்' என்று ஒற்றுமைப்பட்ட நிலையில் அவர்கள் எழுப்பும் விடுதலை முழக்கம்—சுதந்திரத் தமிழகம் வடவரின் அடிமைக்கு இலக்காகிக் கிடக்கும் தமிழ் மக்களது—திராவிட மக்களது பாராட்டுதலுக்கு உரியது என்பதுடன், தமிழர்தம் நியாயத்தை—சுதந்திரத்தை—உரிமையை — பெருமையை நிலைநாட்ட அவர்கள் ஒன்றுபட்டு முற்பட்டிருப்பது, தாய்த் தமிழகத்து மக்களுக்கு உணர்ச்சி ஊட்டக்கூடியதுமாகும்.

வடக்கின் அடிமைத் தளையை அறுத்துக்கொள்ள விடுதலைப் படை அமைத்திருக்கும் திராவிடர்கள், இலங்கைத் தமிழர்தம் நியாயமான உரிமைப் போராட்டத்தை — விடுதலை வேட்கையை ஊக்குவிக்கத் தயங்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

நாள் ஒன்றுக்கு ஒரு பெண் தற்கொலை

சௌராஷ்டிரத்தில் நிலைமை

அகமதாபாத், பிப். 2—

கடந்த ஆறு மாதங்களில் சௌராஷ்டிரத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு பெண்மணி வீதம் தற்கொலைச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாகக் குஜராத், சௌராஷ்டிர மத்திய சமூக சேவா சங்கத்தின் செயலாளரான புஷ்பா பென் மேதா என்பார் தெரிவித்திருக்கிறாராம்.

'இம்மாதிரி பெண்களிடை தற்கொலை மலிந்திருப்பதற்குக் காரணம், சமூக, பொருளாதார நிலைகளேயாகும்' என்றும் அவர் கூறினாராம்.

நாகர்களை வேட்டையாட இராணுவம் தீவிரமாக ஈடுபடுகிறது

தனி நாடு கிளர்ச்சியை ஒடுக்க இந்தியபேரரசு தொடுத்துள்ளபோர்

ஷில்லாங், பிப். 3—

நாகநாடு கோரி கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் நாகர்களை வேட்டையாடுவதற்காக நேற்று முன்தினம் முதன் முதலாக அனுப்பப்பட்ட இராணுவத்தினர், இதுவரை 30 நாகர்களை—அவர்கள் பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்ததாகக் கூறி கைது செய்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

போலீசாருக்கு உதவுவதற்காக இராணுவம் அனுப்பப்பட்டதாம்.

'கிளர்ந்தெழுந்துள்ள நாகர்களுடன், இராணுவத்தினர்களைக் கொண்டு இந்திய சர்க்கார் போர் தொடுத்திருக்கிறதாகவே கொள்ளலாம்' என்று, பார்வையாளர்கள் கருதுகின்றனராம்.

இதுவன்னியில், அசாம் போலீஸ் படையும் பெரிதாக்கப்பட்டிருப்பதாயும் உயர்தர அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

சுமார் 1000 நாகர்கள் ஆயுதந் தரித்தவர்களாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

கொத்தலாவலை கொடுங்கோன்மை

இருந்த உரிமையைத் தட்டிப் பறிக்கிறார்

சர்க்கார் ஊழியர் வேலைநிறுத்தம் செய்யத் தடை

கொழும்பு, பிப். 2—

இலங்கை சர்க்காரின் கிழ் வேலை பார்ப்பவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது சட்ட விரோதமானதாக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையில் சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்குப் பெற்றிருந்த உரிமையை பிரதமர் கொத்தலாவலை, ஒரு உத்தரவு மூலம் தட்டிப் பறித்துவிட்டிருக்கிறார்.

புதிய நிபந்தனையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஊழியர்கள், பதவிகளிலிருந்து விலகிக்கொள்ள—ஓய்வு பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுவார்களாம்.

இதுவரையில் சுமார் 30 பேர் தங்கள் இராஜிநாமாவை அனுப்பிவிட்டனர் எனவும் கூறப்படுகிறது. நேற்று முன் தினம்தான் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுக்கொள்ள கடைசி நாளாக நிர்ணயிக்கப்பட்டிருந்ததாம்.

பதவியிலிருந்து விலகுவது கடமையை ஒதுக்கித் தள்ளுவதாம்!

புதுடில்லி, பிப். 2—

"நெருக்கடியான நேரங்களில் பொறுப்பான பதவிகளிலிருப்போர் இராஜிநாமாச் செய்வது, கடமைகளைத் துணிவுடன் ஏற்று செயல்படுவதை விடுத்து, கடமைகளை உதறித் தள்ளிவிட்டு ஓடுவதாகவே பொருள்படும்,"

என்று, பண்டிதநேரு குறிப்பிட்டிருக்கிறாராம்!

மராட்டிய மாநிலத்தவர் பலர், பம்பாய் தங்களுக்கில்லை என்ற போது, பதவிகளை இராஜிநாமாச் செய்ததைக் குறிப்பிட்டே பிரதமர் இவ்வாறு கூறினாராம்

வேலையின்மை நீங்க ஆய்வுக் குழு சிபாரிசு

சென்னை, பிப். 1—

படித்து வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலைத் தருவதற்கான தனித் திட்டங்களுக்கு அடுத்த 5 ஆண்டுத் திட்டதில் ரூ. 130 கோடி செலவிடுமாறு திட்டக் குழுவினர் அண்மையில் ஏற்படுத்திய 'படித்தவரிடையே வேலையின்மை ஆய்வுக் குழு' சிபாரிசு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இந்த அளவில் செலவிடப்படுமாயின், அதிகப்படியாக சுமார் 2,35,000 பேருக்கு வேலை கிடைக்குமென அக்குழு மதிப்பிட்டுள்ளது.

'மெட்ரிக்குலேஷனும்,' அதற்கு மேலும் படித்துவிட்டு வேலையின்றி இருப்போர் தொகை தற்போது சுமார் $5\frac{1}{2}$ இலட்சம். அடுத்த திட்டக் காலத்தில் சுமார் $14\frac{1}{2}$ இலட்சம் படித்தவர்கள் வருவர். மொத்தம் 20 இலட்சம் பேர் வேலை தேடிக் கொண்டிருப்பர்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் காரணமாக பொதுத் துறையில் 10 இலட்சம் பேருக்கும், தனிநபர் துறையில் 2 இலட்சம் பேருக்கும் வேலை கிடைக்கலாம். ஓய்வு பெறுபவர்கள் முதலியோரையும் கணக்கிட்டால், திட்டக் கால முடிவில் சுமார் $5\frac{1}{2}$ இலட்சம் படித்தவர்கள் வேலையில்லாது இருப்பர். இவர்களுக்காகவே தனித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடல் உறைந்தது!

பாரிஸ், பிப். 2—

ஐரோப்பிய நாடுகளைக் கடும் பனி கவ்விக் கொண்டுள்ளதாம். ஸ்டாக் ஹோம், மாஸ்கோ, பாரிஸ் முதலிய நகர்களில் மக்களின் நடமாட்டம் இன்றி பனியும், குளிரும் ஆட்சி செய்தது. பிரிட்டனில் யார்க்ஷயரில் துறைமுகமொன்றில் கடல் உறைந்தது. பனி வீழ்ச்சியினால் சாலைகளில் போக்குவரத்து தடைப்பட்டது. சேதங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன

தமிழில் நிர்வாகம்

சென்னை, பிப். 1—

திருச்சி மாவட்டத்திலுள்ள எல்லா சர்க்கார் அலுவல்களையும் தமிழ் மொழியில் நடத்திவரும் தற்போதைய நடைமுறைத் திட்டத்தை 1956 ஜனவரி 1-ந் தேதியிலிருந்து மேலும் ஓராண்டிற்கு நீடித்து சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

'தலைக்கு ஏற்றபடிதான் தொப்பி வேண்டும்'

மக்கள் விருப்பப்படிதான் மேலிடம் இருக்க வேண்டும்'

காங்கிரஸ் மேலிடப் போக்கு குறித்து ஒரு 'விமர்சனம்'

'தலைக்கு ஏற்றபடிதான் தொப்பி இருக்கவேண்டும்; தொப்பிக்கு ஏற்றபடி தலை இருக்கமுடியாது. தலை அளவு எடுத்த பின்புதான் தொப்பி தைக்கிறார்களே தவிர; தொப்பி அளவெடுத்து தலையைத் தைப்பதில்லை!

'ஜனநாயகத்தில் ஜனங்களின் விருப்பப்படிதான் மேலிடம் இருக்கவேண்டும். மேலிடத்தின் விருப்பப்படி ஜனங்கள் இருக்கமாட்டார்கள். ஏதோ ஒரு சில அவசர ஆபத்து காலங்களில் ஜனங்களிடம் சகிப்புத் தன்மையை எதிர்பார்க்கலாம். ஆனால் எல்லாச் சமயங்களிலும் மேலிடத்தில் தயாராகும் தொப்பிக்கு ஏற்றபடி மக்களின் தலை இருக்க வேண்டுமென்றால் இது முடிகிற காரியமா?

"எந்த விஷயத்திலும், 'மேலிடத்தின் முடிவு—இதை ஏற்றுக் கொள்ளுங்கள்......,' என்ற 'பஜகோவிந்தம்' இனி பலிக்காது.

"ஆந்திரா-மகாராஷ்டிரம் இணைய வேண்டுமென்கிறார்—ஒரு மந்திரி. இன்னொரு மந்திரி, மகாராஷ்டிரம்-குஜராத் இணைய வேண்டும் என்கிறார்.

"இந்தக் குளறுபடிக்கெல்லாம் விமோசனம் என்ன? மந்திரிகளே இப்படிப் பேசுவது நம்முடைய துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும்.

"நமது தேசிய கீதத்தில் உள்ளபடி பஞ்சாப், சிந்து, குஜராத், மராட்டா, திராவிட, உத்கல, வங்க என்ற அடிப்படை பிரிவினையை ஆரம்பிக்கலாம். சிந்து பாகிஸ்தானுக்குப் போய் விட்டாலும், அது, தேசிய கீதத்தில் இன்னும் இருக்கிறது. சிந்துவுக்குப் பதிலாக ஹிந்தி பேசும் பிரதேசத்தை சேர்த்துக் கொள்ளலாம்.

"இவ்வளவு தொல்லை எதற்கு? கல்கத்தா அருகே செல்லும் கடக ரேகையை எல்லையாக வைத்து, 'உஷ்ணப் பிரதேசம்', 'மித உஷ்ணப் பிரதேசம்' என்று இரு பிரிவுகளாக்கி விடலாம்.

"பூகோளத்தை அடிப்படையாக்கொண்டு சிந்து கங்கை சமவெளி, மேற்குக் கடற்கரைப் பிரதேசம், தட்சிணப் பீடபூமி எனவும் பிரிக்கலாமென மறந்துபோன பாடத்தை யாராவது ஒரு மந்திரி மீண்டும் ஞாபகப் படுத்திக் கொள்ளலாம்.

"'இவ்வளவு யோசனைகள் எதற்கு சார்.........? விந்திய மலையை எல்லையாகக் கொண்டு வடநாடு தென்னாடு என்ற ஒரே பிரிவு போதாதா......?' என்று என் ஆபீஸ் பையன் வேறு தேசபக்தியில்லாத யோசனையைச் சொல்கிறான்.

"யார் எந்த யோசனை சொன்னாலும், மேலிடத்தின் முடிவை மக்கள்மீது திணிக்க முடியாது என்பது மட்டும் உண்மையாகிவிட்டது.

"மேலிடம் என்ன பிரம்மாவா......?' என்று பகிரங்கமாக—அதுவும், தேசபக்தி உள்ளவர்களே கேட்கிறார்களாம்; கேட்பது மட்டுமல்ல — கேட்க வேண்டிய நிலையை மேலிடமே சிருஷ்டி செய்துவிட்டது."

29—1—56 'நவ இந்தியா' இதழில், 'ஊர் வம்பு' என்ற பகுதியில், 'யூ. ஆர்.' என்பவர், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மாணவர் அணி-கழகத்தின் கிளையாகிறது

அண்ணுமலை நகரில் அமைப்புக் கூட்டம்

எதிர்கால வளர்ச்சி குறித்து நடவடிக்கை

28—1—56 மாலை 4 மணிக்கு, திராவிட முன்னேற்றக் கழகம்—மாநில மாணவர் கிளையின் அமைப்புக் குழுக் கூட்டம், அண்ணுமலை நகர் மணியக்காரர் தோப்பு, அண்ணு அகத்'தில், தோழர் பொன்னுவேலு தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், தோழர்கள் டி.கே. பொன்னுவேலு, வே. சிவப்பிரகாசம், தில்லை-வில்லாளன், உ. பில்லப்பன், இரா. நாகராசன், வெ. கிருஷ்ணமூர்த்தி, கோ. வளவன், சி. டி. தண்டபாணி, சுடர்மணி, அ. முத்து, எல். லெனின், சிந்தனைப்பித்தன், பு. இராமசாமி, ந. முத்துசாமி, பி. எஸ். மணியம், எல் திருவேங்கடம், பி. மதிவதனன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறப்பு அழைப்பின்பேரில் தோழர் கே. ஏ. மதியழகன் கலந்துகொண்டார்.

பின்னர், அமைப்புக் குழுவில் புதிதாக 14 பேரை சேர்ப்பதற்கு ஆதரவு தந்தும், தி. மா. மு. கழக முன்னுள் பொதுச்செயலாளர் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

அடுத்து, மாணவர் இயக்கத்தின் எதிர்கால வளர்ச்சி பற்றி தோழர்கள் பு. இராமசாமி, கிருஷ்ணமூர்த்தி, மதிவதனன், பி. எஸ். மணியம், நாகராசன், உ. பில்லப்பன், சிந்தனைப்பித்தன், சுடர்மணி, முத்துசாமி, முத்து, சி டி. தண்டபாணி, எல். லெனின், திருவேங்கடம், கோ. வளவன், தில்லை-வில்லாளன், வி. சிவப்பிரகாசம், ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில், தோழர் மதியழகன் சிறப்புரையாற்றினுர்.

கூட்டத்திற்குப் பல ஏற்பாடுகள் செய்து தந்த தோழர் தில்லை-வில்லாளன் அவர்களுக்கும், வீடு தந்துதவிய தோழர் சின்னையன் அவர்களுக்கும், மாலை சிற்றுண்டிக்கும், இரவு உணவுக்கும் ஏற்பாடு செய்த அண்ணுமலை நகர் தி. மா. மு. கழகத்தினருக்கும், மற்றும் சிதம்பரம் தி. மு. கழகத்தினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கூட்டத்திற்கு வராத அமைப்புக் குழு உறுப்பினர்கள் தோழர்கள் மாறன், மா. பாண்டியன், ஞானசம்மந்தம், இராமச்சந்திரன் ஆகியோர் தங்கள் ஒப்புதலைக் கடிதங்கள், தந்தி ஆகியவை மூலம் தெரிவித்திருந்தனர். சேலம் மாவட்ட மாணவர் இயக்கப் பொருளாளர் தனது பாராட்டுதலைத் தெரிவித்திருந்தார்.

தீர்மானங்கள்

1. தி. மா. மு. கழக 2-வது மாநில மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க, கழக அமைப்புக் குழுவை விரிவுபடுத்தும் முகத்தான் கீழ்க்கண்டவர்களை நியமிக்கின்றது :—

சேலம் :— சுடர்மணி, அ முத்து,
புதுவை :—லெனின்.
அண்ணுமலைநகர் :—சிந்தனைப்பித்தன், பு இராமசாமி, ந. முத்துசாமி.
மதுரை :—பி. எஸ். மணியம்
திருச்சி :—திருவேங்கடம், மதிவதனன்
திருநெல்வேலி :—அமீது
இராமநாதபுரம் :—தங்கபாண்டியன்
திருவனந்தபுரம் :—இராமச்சந்திரன்
வட ஆற்காடு :—ஞானசம்மந்தம்
சென்னை :—டி. கே. இராஜாபாகர்

2. திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தினைக் கடந்த 9 ஆண்டு காலமாகத் திறம்பட நடத்திச் சென்ற திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முன்னுள் பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு இக்குழு தன்னுடைய நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன், எதிர்கால ஆக்க வேலைகளில் அன்னுரது அரிய ஆலோசனைகளுக்குட்பட்டு நடப்பதற்கு உறுதியளிக்கின்றது.

3. (அ) திராவிடமாணவர் முன்னேற்றக் கழகம் ' என்ற பெயரில் இருந்துவரும் அமைப்பை, 'திராவிட முன்னேற்றக் கழகம்—மாநில மாணவர் கிளை' என்று அழைப்பதென்றும், இந்த அமைப்பு தனியாக இயங்காமல், தி. மு. கழகத்தின் ஒரு பகுதியாக இயங்குவதென்றும் இந்த அமைப்புக் குழு தீர்மானிப்பதுடன், இந்த முடிவு ஏற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று, தி. மு. க. பொதுச் செயலாளரையும், பொதுக் குழுவையும் கேட்டுக்கொள்ளுகின்றது.

(ஆ) இந்த முடிவை, தி. மு. கழகப் பொதுக்குழுவில் தி. மா. மு. கழக முன்னுள் பொதுச் செயலாளர் தோழர் மதியழகன் அவர்கள் எடுத்துக்கூறி, இம்முடிவை ஏற்கச் செய்யவேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகின்றது.

4. 'திராவிட முன்னேற்றக் கழகம்—மாநில மாணவர் கிளை'யின் சட்ட திட்டங்களையும், தி மு கழகத் தலைமைக் கழகத்துடன் உள்ள அதன் தொடர்பினையும் வரையறுத்துச் செய்து தருமாறு கீழ்க்கண்ட சட்ட திட்டக் குழுவினரை நியமிக்கின்றது :—

வீ. சிவப்பிரகாசம்—சட்டதிட்ட அமைப்பாளர், வி கிருஷ்ணமூர்த்தி, உ. பில்லப்பன், பு இராமசாமி, பி. எஸ். மணியம்.

5. 'திராவிட முன்னேற்றக் கழகம்—மாநில மாணவர் கிளை'யின் சிறப்பிதழாக 'தம்பி', அரசியல் வாரப் பத்திரிகை பணி புரிய வேண்டுமென்று அமைப்புக் குழு உறுப்பினரும், 'தம்பி' ஆசிரியருமான தோழர் தில்லை - வில்லாளனைக் கேட்டுக்கொள்ளுகிறது.

6. (அ) தேவிகுளம், பீர்மேடு பிரச்சினையில் நேரு சர்க்காரின் அநீதியை இந்த அமைப்புக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) தமிழகமெங்கும் வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டங்கள் மூலம், டில்லி சர்க்காருக்கு மாணவர் உலகின் கொதிப்பை உணர்த்திய திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கல்லூரி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களைப் பாராட்டுகின்றது.

(இ) திராவிட முன்னேற்றக் கழகம் இது சம்பந்தமாய் எடுக்கும் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு, அதற்கு ஆதரவு அளிப்பதென உறுதி கூறுகிறது. (ந. - கி.)

தி. மு. கழக 2-வது

மாநில மாநாடு

அலுவலகம்

திருச்சியில் 'மே திங்களில் நடைபெறும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டிற்கென 1—2—56 முதல் தனியாக அலுவலகம் திறக்கப்பட்டிருக்கிறது.

மாநாடு சம்பந்தமாகக் கடிதம் எழுதும் தோழர்கள் இனி கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுத வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

அலுவலக நேரம் :
காலை 9—1; மாலை 3—7
செயலாளர்
தி. மு. கழக 2-வது மாநில மாநாடு
நெ. 9, கிலேதார் தெரு,
தெப்பக்குளம்—திருச்சி.

அவசரச் சட்டம்

புதுடில்லி, பிப். 1—

'விற்பனை வரிச் சட்டங்களைச் செல்லு படியாக்கும் அவசரச் சட்டம்' என்ற பெயரில் இந்தியக் குடியரசுத் தலைவர் ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளார்.

துணைப் பொதுச்செயலாளர் சுற்றுப்பயணம்

20-ந் தேதி பொது வேலைநிறுத்தம் குறித்து விளக்கம்

போளூர், பிப். 3—

31-1-56 மாலை 6-30 மணிக்கு போளூர் (வ. ஆ) தி. மு. கழகச் சார்பில், கடைவீதி அடுத்த திடலில் மாபெருங் கூட்டம் நடைபெற்றது. தோழர் கன்னையன் தலைமை தாங்கினுர். ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

தோழர் போளூர் சுப்பிரமணியம் திராவிடர் திருநாள் சிறப்பு குறித்துப் பேசினுர். அடுத்து தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தேவிகுளம், பீர்மேடு பிரச்சினை குறித்து மிக விரிவாகச் சொற்பொழிவாற்றினுர்.

அடுத்து துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் பேசுகையில் தமிழ்ப்பகுதிகள் இணைப்பு குறித்து சர்வ கட்சிக் குழு எடுத்துள்ள முடிவையும், அதற்குத் தி மு கழகப் பொதுக் குழு தந்துள்ள ஆதரவினையும் விளக்கி 20-2-56 அன்று அமைதியாகப் பொது வேலைநிறுத்தம் செய்யுமாறு குறிப்பிட்டுச் சொற்பொழிவாற்றினுர்.

அன்று மாலை 4-மணிக்கு ஊர்வலமும் நடைபெற்றது.

திருவத்திபுரம் :

2—2—56 வியாழன் மாலை 6 மணிக்குத் திருவத்திபுரம் தி. மு. கழகச் சார்பில், பெரியார் திடலில் திராவிடர் திருநாள் கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் குட்டியப்பன் தலைமை வகித்தார். தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, வி. எஸ். கோவிந்தராசன், ஆகியோர் பேசிய பின் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் 20—2—56 அன்று நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தம் குறித்தும், திரு-கொச்சி ஆந்திர தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும், அதற்காக சர்வகட்சியினர் எடுத்துள்ள முடிவினையும், தி. மு. கழகத் தோழர்கள் ஆற்றவேண்டிய கடமைகளையும் விளக்கி நீண்டநேரம் சொற்பொழிவாற்றினுர்.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

'தைப் பொங்கலன்று திராவிடர் திருநாள் கொண்டாடுவீர்' என்று தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தந்திருந்த அறிக்கைக்கு ஒப்ப, நாடெங்கும் கழகத் தோழர்களும், பொதுமக்களும் வெகு சிறப்பாக விழாக் கொண்டாடியிருக்கின்றனர்.

சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கல், எளியோருக்கு உணவளித்தல், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், சிறப்புக் கூட்டங்கள் கூட்டுதல், இசை அரங்கம்-நாடகம் நடத்துதல் போன்ற நிகழ்ச்சிகளுடன் விழாக்கள் நடைபெற்ற விபரங்கள் இங்கு சுருக்கித் தரப்பட்டுள்ளன :—

சென்னை 12-வது வட்டம்

14—1—56 காலை 10 மணிக்கு வட்டத்தின் முக்கியத் தெருக்கள் கழகக் கொடி, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டன தோழர் ஏ. கண்ணப்பர் கழகக் கொடி ஏற்றினுர். பின்னர் கழக மனையில் திராவிடர் திருநாள் எனும் பொருள் பற்றித் தோழர்கள் பி.எஸ். அழகரசு, தமிழழகன், இறை ஒளி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், சிறுவர் சிறுமியர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

தூத்துக்குடி

14—1—56-ல், தூத்துக்குடி எஸ். எஸ். பிள்ளை தெருவிலிருக்கும் மக்கள் மறுமலர்ச்சி மன்றச் சார்பில் தோழர் பி. முத்துச்சாமி தலைமையில் விழா வெகு சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

குமாரம்

14—1—56-ல் குமாரம் சௌந்திரபாண்டியனுர் படிப்பகச் சார்பில், தோழர் ச. சிவந்தியான் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் சி. கோவிந்தராசன் கழகக் கொடியேற்றி வைத்துச் சிறிது நேரம் பேசினுர். பிற்பகல் 3 மணியளவில் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

ஸ்ரீராமபுரம்—பெங்களூர்

14—1—56 காலை 9 மணிக்கு, தோழர் எஸ். வி. பதி அவர்களால் கொடியேற்றப்பட்டது. சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. அன்று இரவு 8-30 மணிக்கு 'புரட்சிப் பாடகன்' என்னும் நாடகம், பகுத்தறிவு நாடக மன்றத்தாரால் நடத்தப்பட்டது.

15—1—56 பகல் 2 மணிக்கு, பல பந்தய விளையாட்டுகள் நடைபெற்றன. மாலை 6 மணிக்கு தோழர் மு. வீரப்பன் தலைமையில் தோழர்கள் செ. விழியன், முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசினர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது.

நிலக்கோட்டை

15-1-56ல், கிளைக் கழகச் சார்பில் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கிளைக் கழக இல்லம் அழகுற அலங்கரிக்கப்பட்டது. இரவு 8-மணிக்கு தோழர் இ. காத்தான் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். பின்னர் இசைவிருந்தும் நடைபெற்றது.

பம்பாய்

16—1—56 மாலை 7 மணிக்கு சௌந்திரபாண்டியனுர் பகுத்தறிவு மன்றத்தின் சார்பில் பாண்டியனுர் திடலில் நடைபெற்றது தோழர் டி. வி. துரை விழாவைத் துவக்கி வைத்தார். தோழர் பொ. தர்மராசன் (ப. தி.மு. க. துணைச் செயலாளர்) கூட்டத்திற்குத் தலைமை தாங்கினுர். தோழர்கள் டீ. இராசாமணி, எஸ். பொன்னையா, வி. தேவதாசன், மா. இரா. குறள்தாசன் ஆகியோர் பொங்கல் விழாவின் சிறப்புப் பற்றிப் பேசினர். தோழர் டி. வி. துரை பலவிடங்களிலிருந்து வந்த வாழ்த்திதழ்களை வாசித்தார்.

• • •

வரவேற்புக் கூட்டம்

18—1—56 மாலை 6 மணிக்கு மன்றத்தின் சார்பாக தோழர் கண்ணதாசன் அவர்களுக்கு தோழர் வி. தேவதாசன் தலைமையில் ஓர் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கண்ணதாசன் அவர்கள் மன்றத் தோழர்களின் கடமை பற்றியும், மன்றத்தை நடத்திச் செல்லவேண்டிய முறைகள் பற்றியும் பேசினுர்.

மதுரை

17—1—56-ல், மதுரை, ஆட்டுமந்தை பொட்டல்சந்தில் மீன் மார்க்கெட் சமீபம் உள்ள அறிவு வளர்ச்சிப் படிப்பகத்தின் முன்பு உள்ள மஜீத் திடலில், சிறப்பாக விழா நடைபெற்றது. தோழர் ஏ. எஸ். கணேசன் தலைமை தாங்கினுர். தோழர் இராஜா கழகக் கொடி ஏற்றுவித்தார். தோழர்கள் எஸ். முத்து எம்.சி, அரசக்கண்ணன், கே. எஸ். சந்தானம், கே ஆர். அனீபா, எஸ். பி. எஸ். அமீது ஆகியோர் பேசினுர்கள். இறுதியில் இன்னிசை விருந்தும் நடைபெற்றது.

பொன்மலை—மேலக் கற்கண்டார்கோட்டை

21—1—56 மாலை 6 மணிக்கு திரு. வி. க திடலில், கிளைக் கழகச் சார்பில் விழா சிறப்புறக் கொண்டாடப்பட்டது. மாலை 6 மணிக்கு தோழர் கே. எஸ். பக்கிரிசாமி இசை விருந்துடன் பொதுக்கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்திற்குத் தோழர் மு. மாணிக்கம் தலைமை தாங்கினுர். தோழர்கள் சி. பி. சிற்றரசு, டி. பி. அழகமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

****

பொதுக் குழு முடிவுப்படி

தி. மு. கழக உறுப்பினர் சேர்க்கும் காலம்

29—2—56

வரை நீடிக்கப்படுகிறது

★

கழகம் வலிவும் பொலிவும் பெறக் கழகச் செயலாளர்கள் உறுப்பினர் பதியும் பணியைத் தீவிரமாக்குவார்களாக!

★

தலைமை நிலையத்தில்

பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் உரிமைச் சீட்டுகள் பிப்ரவரி 15-ஆம் நாளுக்குமேல் கிளைக் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்பெறும்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

****

நெடுஞ்சாலை அபிவிருத்தி

புதுடில்லி, பிப். 1—

நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கு இரண்டாவது திட்டத்தில் ரூ 55 கோடி செலவிடப்படுமாம். நதிகள் மீது இப்போது இல்லாதிருக்கும் சுமார் 60 பாலங்களும், சுமார் 600 மைல் நீளத்திற்கு சாலைகளும் போடப்படுமாம்.

ஆட்சியாளர் பேச்சுக்கு அண்ணா கண்டனம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"லேடி கொடீவா நிர்வாணமாக (நீண்ட கருங்கூந்தலால், மூட வேண்டியவைகளை மூடிக்கொண்டு) குதிரை மீதேறி நகரை வலம் வந்தார்; ஆனால், அவர் அப்படி வலம் வருவதை நகரில் உள்ள எவரும் காணவில்லை; எல்லோரும் வீடுகளுக்குள் அடைந்துகிடந்தார்கள் எந்த ஒரு வீட்டின் கதவும், பலகணியும் திறந்திருக்கவில்லை; எங்கும் ஒரே அமைதி; மாணவர்கள் புத்தகங்களால் முகத்தை மூடி மறைத்துக்கொண்டனர்; ஆடவர்கள் கதவுகளைத் தாளிட்டுக்கொண்டு முடங்கிக்கிடந்தனர்; பெண்டிர் அடுப்பங்கரையைவிட்டு வெளியே வரவில்லை.

"ஒரு குறும்புக்காரன் மட்டும், 'என்னதான் நடக்கிறது? எப்படித்தான் லேடி கொடீவா நிர்வாணமாக வருகிறார், பார்க்கலாமே?'—என நினைத்து, சன்னல் கதவை சற்று நீக்கி வெளியே உற்று நோக்குகிறான்; ஆனால், அவனது கண்களைக் கொள்ளிக்கட்டை கொண்டு சுட்டுவிடுகிறான், இன்னொருவன்; அவனும், கொடீவா நிர்வாணமாக வரும் காட்சியைக் காண விரும்பினாலும், காணவில்லை; ஊர், ஒரே அமைதியில் ஆழ்ந்துகிடந்தது.

"அதுபோன்ற அமைதி வரும் பிப்ரவரி 20-ல், நாடெங்கும் நிலவ வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

"நாட்டை ஆளுகிற அமைச்சர்கள், அன்று 'நாட்டைப் பார்த்துவிட்டுப் போகலாம்' என்று வந்தால், 'நாம் என்ன நாட்டைத்தான் ஆளுகிறோமா— இடுகாட்டைத்தான் ஆளுகிறோமா? மக்கள் எல்லாம் நம்மிடம் தான் உள்ளனரா—நாட்டில் உலவுகின்றனரா? அல்லது அத்தனை பேரும் சிறைப்பட்டுவிட்டனரா? என்று எண்ணத்தக்க வகையில் பிப்ரவரி 20-ல் பொது வேலை நிறுத்தத்தின்போது நாட்டில் ஒரே அமைதி நிலவ வேண்டும்.

"லேடி கொடீவாவை நிர்வாணக்கோலத்தில் பார்க்க நினைத்த கொடியவனது கண்கள் கொள்ளிக்கட்டையால் குத்தப்பட்டதுபோல, நாட்டை ஆளும் அமைச்சர்கள் பிப். 20-ல் பொது வேலை நிறுத்தத்தைப் பார்க்க வந்தால், நீங்கள் கொள்ளிக்கட்டையால் அவர்கள் கண்களைக் குத்த வேண்டுமென்பதல்ல—அமைதியாக இருந்தால் போதும்

"அதிகமான மான உணர்ச்சி உடையவர்களானால், மந்திரிகள் அந்தக் காட்சியைக் கண்டதும், தாங்கள் மகாமேருவென மதிக்கும் பண்டித நேருவிடம் ஓடட்டும்; 'எங்கள் நாட்டவர் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு கொதிப்படைந்திருக்கிறார்கள்; கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறார்கள்; பொது வேலை நிறுத்தம் செய்கிறார்கள்; எனவே, அநீதியை அகற்றுங்கள்' என்று கோரட்டும்.

"இல்லை; சிறிதளவு தன்மான உணர்வு உடையவர்கள் என்றால், தங்கள் பதவிகளை இராஜிநாமாச் செய்யட்டும்.

"ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு ஆட்சிக்கு இழிவும் பழியும் தேடித்தர பெரும் கொந்தளிப்பு ஏற்பட வேண்டுமென்பதல்ல — சர்க்கார் அலுவலகங்கள் தாக்கப்பட்டு, அதிகாரிகள் அடித்து நொறுக்கப்பட்டு, மந்திரிகள் முகத்தில் திராவகம் வீசப்பட்டு, கடைகள் கொள்ளையிடப்பட வேண்டுமென்பதல்ல!

"இங்கிலாந்து போன்ற ஜனநாயக நாடுகளில் ஆட்சிக்கு இழிவும் பழியும் தேடித்தர, நாடு சுடுகாடுபோலக் காட்சி தரும் பொது வேலை நிறுத்தம் மட்டுமே போதுமானது எனக் கருதப்படுகிறது.

அந்த உயர்ந்த நிலை இந்த நாட்டில் இல்லை என்றாலும், அத்தகு பொது வேலை நிறுத்தங்கள், 'மக்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் ஒன்றுபட்டு நிற்கிறார்கள்' என்பதையாவது அரசாங்கத்தவருக்கு உணர்த்த வேண்டும்.

"பிப்ரவரி 20-ந் தேதிய பொது வேலை நிறுத்தத்திற்கு நீங்கள் இப்போதிருந்தே நாட்டு மக்களை தயாராகும்படி செய்யவேண்டும்.

"எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்ட இந்த கூட்டணி ஓராண்டு காலத்திற்குத் தொடர்ந்து பணியாற்றுமானால், மமதை நிறைந்த பண்டித நேருவை மலை உச்சியிலிருந்து கீழிறக்க முடியும், நிச்சயமாக!

"பண்டித நேருவிடம் என்ன இருக்கிறது—பிரிட்டிஷார் விட்டுப்போன 'பிரித்தாளும் சூழ்ச்சி'யைத் தவிர!

"சீக்கியர் எதிர்த்தால், பஞ்சாபியர் ஆதரிக்கின்றனர்; பஞ்சாபியர் எதிர்த்தால், வங்காளிகள் ஆதரிக்கின்றனர்; வங்காளி எதிர்த்தால், மராட்டியர் ஆதரிக்கின்றனர்; மராட்டியர் எதிர்த்தால் முஸ்லீம்கள் ஆதரிக்கின்றனர்'—என்று பிரித்தாளுகிற சூழ்ச்சியைத்தான் வெள்ளையர் கையாண்டுவந்தனர்.

"இன்று பண்டிதரும், 'தமிழரசுக் கழகம் எதிர்த்தால் கம்யூனிஸ்டு ஆதரிக்கும்; கம்யூனிஸ்டு எதிர்த்தால் பிரஜா-சோஷலிஸ்டு ஆதரிக்கும்'—என்று, பிரித்தாளும் சூழ்ச்சியைத்தான் கையாண்டு வருகிறார்; ஆனால் இப்போது? கூட்டணியில் உள்ள எந்த ஒரு பலவீனனும், தமிழை விட்டுவிட்டு, நேரு பக்கத்தில் நிற்கமாட்டான்.

"தமிழை விட்டுவிட்டு, ம. பொ. சி., நேரு பக்கம் செல்வாரா?

"மக்களை விட்டுவிட்டு ஜீவானந்தம் செல்வாரா—புல்கானின வந்து போனாலும்கூட!

"நாம் எப்போதும் சென்றதில்லை; செல்லவும் மாட்டோம்—என்பதை நாடு நன்கறியும்.

"யார்தான் செல்வார்கள்?

"'எல்லாம் சரி? இவ்வளவு பெரிய கூட்டணி அமைத்த பெரும் முயற்சி செய்வதற்கு, தேவிகுளம் - பீர்மேடு என்ன அவ்வளவு முக்கியமான பகுதிகளா?'- என்று சிலர் கேட்கக்கூடும்.

"உழவன் தனக்குச் சொந்தமான ஆட்டுக்குட்டி ஒன்றை புலி ஒன்று தூக்கிக்கொண்டு ஓடுவதைக் கண்டால், 'தூக்கிக்கொண்டு செல்லப்படுவது சிறு ஆடுதானே' என்றோ, அல்லது, 'தூக்கிக்கொண்டு செல்வது புலியாயிற்றே' என்று பயந்தோ, வாளாவிருப்பதில்லை.

"தனது ஆட்டைப் புலியிடமிருந்து மீட்பதற்காகக் கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு; புலியைவிட வேகமாக ஓடி, புலியைத் தாக்கிப் போரிடுகிறான்.

"ஆனால், தேவிகுளம் பீர்மேடு ஆட்டுக்குட்டி அல்ல; 3,000 4,000 அடி உயரத்தில் உள்ள மலைக் குன்றுகளில் புரவிக் கிடக்கும் தாலுக்காக்கள் அவை! பச்சைப் பசேலென, பச்சைப் பட்டு விரித்தாற்போல எங்கும் ஒரே பசுமை படர்ந்த தோட்டக் காடுகளாகும்; தேவிகுளமும் பீர்மேடும்!

"அவை மலைகள் என்றால், இங்குள்ள பல்லாவரம் மலை, பறங்கி மலை அல்லது திருவண்ணாமலை போன்ற மலைகள் அல்ல!

"தேயிலை, ரப்பர், ஏலம், கிராம்பு, மிளகு, வாழை, கமுகு, தென்னை—என்று, செல்வம் கொழிக்கும் பூமி—சிந்து பாடும் சிற்றாறுகளைக் காணலாம்; களிறுகள் பிளிறுவதையும், வண்டுகள் ரீங்காரமிடுவதையும் கேட்கலாம்.

"உழைத்து அலுத்த மக்களின் பெருமூச்சையும் ஸ்பரிசிக்கலாம்.

"மக்களில் சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் — 'நாட்டுச் செல்வம்தான் செழிப்பானது; காட்டுச் செல்வம் அப்படிப்பட்டதல்ல'—என்று!

"காட்டுச் செல்வம் அழகப்ப செட்டியார் இரும்புப் பெட்டியில் இருப்பதைப் போன்றது; காணவும் முடியாது—தொடவும் முடியாது; நாட்டுச் செல்வம், நம் பையில் இருக்கும் சில்லரைக் காசு போல! பை ஓட்டையானால் நழுவிவிடும்!

"இந்தியாவிற்கு டாலர்தான் வேண்டும் என்கிறார்களே—அந்த டாலரைச் சம்பாதித்துக் கொடுக்கும் பொருள்கள் விளையும் வளமான மலைப் பிரதேசம்—தேவிகுளம்—பீர்மேடு; இந்த மலைப் பிரதேசத்தில் இன்று எழுந்து நிற்கும் தேயிலை, ரப்பர் தோட்டங்களை எழச் செய்தவன் தமிழன்.

"வெறும் புதர்களாயும் காடுகளாயும் இருந்த அந்த மலைப் பகுதியை வளப்படுத்தியவன் தமிழன்.

காடுகளை அழித்துத் தோட்டங்களாக மாற்றுவதற்காக வெள்ளைக்காரன் கூலிக்கு ஆள்பிடித்த கதையே சோகமானதாகும்.

"பவுன்களை பத்து, இருபது என்று மூட்டை கட்டி, அந்த மலைகளுள் வீசி எறிந்துவிடுவார்களாம்; காட்டினுள் சென்று அவற்றை எடுப்பவர்கள் தங்களை அந்தப் பவுன்களை வைத்துக் கொள்ளலாம்' என்று வெள்ளையர் அறிவித்தனராம்.

"பத்து பேர்—தமிழர் சென்றால், ஒன்பது பேர் பிணமாவர்; ஒருவன்தான் அந்தப் பிணங்களைத் தாண்டி பவுன் மூட்டையைப் பெறுவான்; இந்தப் பத்து பேரும் மலைமேலே செல்லும்போது, காடுகளை அழித்துக்கொண்டே செல்வாராம்; காடுகளை அழிப்பதற்குத்தான் வெள்ளையர் இந்த தந்திரத்தைக் கையாண்டிருக்கின்றனர். இப்படி தமிழர்கள் உயிரைப் பலிகொடுத்து, உதிரத்தைச் சிந்தி உழைத்து, அந்த மலைப் பகுதியை தேயிலையும், ரப்பரும் கொழிக்கும் வளமான தோட்டக் காடுகளாக்கினர்.

"இப்படிப்பட்ட தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளைத்தான் ஆட்சியிலிருப்போருக்குக் கணக்கெடுக்கத் தெரியாத காரணத்தால்—வாதாடத் தெரியாத காரணத்தால் — அநியாயத்தை எதிர்த்துப் போரிடும் முதுகெலும்பு இல்லாத காரணத்தால் பறிகொடுக்க இருக்கிறது தமிழகம்.

"எத்தர்கள் பறித்துக்கொள்ள நினைக்கிறார்கள்; தமிழர்கள் ஏமாளிகளாக்கப்படவிருக்கிறார்கள்; ஆகவே தான், 'எழுச்சி கொண்ட தமிழர்களே! விழிப்புற்ற தமிழர்களே! ஒன்று சேருவீர்—நம் மூதாதையர் உழைத்து வளர்த்த மண்ணைக் காப்பாற்றுவதற்கு—பறிபோகாமல் பார்த்துக்கொள்வதற்கு'—என்று அழைக்கிறோம்!

"அப்படியானால், 'இலாபம் கருதித்தானா இந்தப் போராட்டம்' என்று தேசியத் தோழர்கள் கேட்கக்கூடும்.

"தேவிகுளம்—பீர்மேடு, வளமான மலைகளாயில்லாத வறண்ட பாலைவனமாகவேதான் இருக்கட்டும்; அதற்காக உரிமையை விட்டுக்கொடுக்க முடியுமா?

"தாய், தன் குழந்தையை எவனோ ஒருவன்—அவன் குடிகாரனாயிருந்தாலும், பேயனானாலும், வெறியன் என்றாலும்—தூக்கிச் சென்றால், பதறித் துடிக்கமாட்டாளா? பறிபோகும் குழந்தையை மீட்கத் துடிக்கமாட்டாளா? அதுபோலவே, 'தமிழகம்', இன்று பறிபோகும் குழந்தையைக் காப்பாற்ற ஓடும் தாய்போல, தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளை மீட்கக் கிளம்பியுள்ளது.

"சென்னை மந்திரிகள்—முதலமைச்சர் உட்பட—'தேவிகுளம், பீர்மேடு இங்கிருந்தால் என்ன—அங்கு இருந்தால் என்ன? நம்மிடமிருந்தால் என்ன—அவர்களிடமிருந்தால் என்ன?'—என்று பேசுகின்றனர்.

"பொறுப்பில் உள்ளவர்கள் பேசுகிற பேச்சா இது?

"பரதேசிகள் பேசிக் கொள்ளலாம்; பண்டாரங்கள் பேசலாம்—'இந்தச் சட்டி என்னிடமிருந்தால் என்ன – அவனிடமிருந்தால் என்ன? உறங்குவது மடமானால் என்ன – மைதானமாயிருந்தால் என்ன?' என்று! ஆனால், ஆட்சிப் பொறுப்பிலிருப்பவர்கள இப்படிப் பேசுகிறார்கள். இவர்களை நாம் என்ன நினைப்பது? எந்தக் கோஷ்டியில் சேர்ப்பது? பரதேசி, பண்டாரங்கள் கோஷ்டியிலா?

"மராட்டியத்தில் மனித உருவில் உலவும் ஒரு தசைப் பிண்டத்தை இவர்கள் காட்டட்டும் பார்க்கலாம்! 'பம்பாய் மராட்டியருக்கிருந்தால் என்ன – வேறெங்கிருந்தால் என்ன?' – என்று பேசும் ஒரு மராட்டியனை இவர்கள் காட்டட்டும் மானமுள்ள மராட்டியர், அப்படிப் பேசக் காணோம் இவர்கள் பேசுகிறார்கள் இங்கு – மந்திரிகளாயிருந்து கொண்டு – 'தேவிகுளம், பீர்மேடு யாரிடமிருந்தால் என்ன?' — என்று?

"மதிப்புள்ள மந்திரிகள் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருந்தாலாவது பரவாயில்லை என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது!"

மாநில மாநாடு நிதி அளிப்புக் கூட்டம்

5—2—56 ஞாயிறு மாலை 6 மணிக்கு

மண்ணடி-பவழக்காரத் தெருவில்

கே. ஏ. மதியழகன்

அவர்கள் தலைமையில்

அண்ணா

மற்றும் பலர் பேசுவர்

—11-வது வட்ட தி. மு. கழகம்

நிறுத்திவிட்டனர்...!

சென்னை, பிப். 1—

'ரிக்ஷா'க்களுக்கும், 'சைக்கிள் ரிக்ஷா'க்களுக்கும், 'ரிக்ஷா' இழுப்போருக்கும் புது 'லைசென்சு'கள் வழங்குவதை சர்க்கார் நிறுத்திவிட்டனர். ஆட்கள் இழுக்கும் 'ரிக்ஷா'க்களையும், 'சைக்கிள் ரிக்ஷா'க்களையும் படிப்படியாக ஒழித்தாக வேண்டும் என்ற சர்க்காரின் திட்டத்திற்கேற்பவே 'ரிக்ஷா'க்களுக்குப் புது 'லைசென்சு' வழங்குவதை சர்க்கார் நிறுத்திவிட்டனராம்!

'ஆட்டோ ரிக்ஷா'க்களையும், 'பேபி டாக்சி'களையும் அதிகரிப்பது பற்றி சர்க்கார் யோசித்துவருகிறார்களாம்!

வருமானம் எவ்வளவு?

சென்னை, பிப். 2—

நியாய வார மசோதா தற்போதுள்ள முறையில் அமுல் செய்யப்பட்டால் நிலச்சுவான்தாரருக்கு நான்கு சத விகித வட்டி கிடைக்கும் அளவுக்கே வருமானம் வருமென்று கூறப்படுகிறது.

குடந்தை தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

5—2—56 காலை 10 மணிக்கு ஜெ. பி. கீழ வீதியிலுள்ள அண்ணா அரண்மனையில் கிளைக் கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். 12—2—56-ல் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவது குறித்து ஆலோசிக்கப்படும்.

சுகாதார ஊர்வலம்

5—2—56 காலை 8-30 மணிக்கு தோழர் சி. எம் பரிபூரணம் தலைமையில் சென்னை—சூளை நகர இளைஞர் கழகத்தின் சார்பில், சுகாதார ஊர்வலம் ஒன்று குமாரசாமி ராஜபுரத்திற்குச் சென்று பணியாற்றும். அங்குள்ள மக்களுக்குப் பால் வழங்கப்படும்.

இணைப்புக்கு எதிர்ப்பு!

கல்கத்தா, பிப். 2—

மேற்கு வங்க—பீகார் இணைப்புத் திட்டத்தை மேற்கு வங்க சர்க்கார் இம்மாதம் 10-ந் தேதிக்குள் 'வாபஸ்' பெறவில்லையானால் நேரடி நடவடிக்கை எடுக்க எல்லா இடதுசாரிக் கட்சியினரும் கொண்ட ஐக்கிய முன்னணி குழு தீர்மானித்துள்ளது.

பொதுவேலை நிறுத்தம், அறப்போர், இன்னும் மற்றவிதமான போராட்டங்கள் இந்த நேரடி நடவடிக்கையில் இருக்குமாம்.

கல்கத்தாவில் உள்ள 360 கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சம் மாணவர்கள் இன்று பள்ளிகளுக்குச் செல்லாமல் 'எச்சரிக்கை நாள்' நடத்தினர். மாணவர்கள் தங்கள் பள்ளிகள், கல்லூரிகள் முன்பு குழுமி இணைப்பு எதிர்ப்பு முழக்கமிட்டனர்.

புதிய பிரதம நீதிபதி

புதுடில்லி, ஜன. 31—

உடல் நலக் குறைவால் இந்தியத் தலைமை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி பிஜன்குமார் முகர்ஜி தனது பதவியிலிருந்து விலகிக்கொள்வதை வருத்தத்துடன் அங்கீகரித்துக்கொண்ட குடியரசுத் தலைவர், சுதிரஞ்சன் தாஸ் என்ற நீதிபதியை நிரந்தரப் பிரதம நீதிபதியாக நியமித்திருக்கிறாராம்.

காங்கிரசிலிருந்து நகரசபை உறுப்பினர்கள் நீக்கம்

பம்பாய் மாநிலக் காங்கிரஸ் குழுவின் முன்னிசைவு இன்றி, பம்பாய் நகரசபை உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்த 10 உறுப்பினர்களை காங்கிரசிலிருந்து உடனடியாக நீக்குவதென்று பம்பாய் மாநிலக் காங்கிரஸ் குழுவின் செயற் குழு தீர்மானித்ததாம். இரண்டு ஆண்டுகள் இவர்கள் காங்கிரசிலிருந்து நீக்கப்படுவார்களாம்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.